Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 318

திங்கட்கிழமை
10 ஒக்ரோபர் 2022

புரட்டாதி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

முச்சந்தி முரளி



"22 ஆவது திருத்தம் மாதிரி உதுவும் வெறும் வாய்ப்பந்தல்தான், நடக்க வாய்ப்பில்லை ராஜா"

## இனிமேல் இலங்கை ஏழ்மையான நாடு!

### பிரகடனப்படுத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரம் தயார்

கொழும்பு, ஒக். 10
இலங்கையை குறைந்த வருமானம் பெறும் நாடாக அடையாளப்படுத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது என அறியமுடிகின்றது. இதற்கான அமைச்சரவைப் பத்திரம், இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளதென 12

# விருப்பு வாக்குமுறை இருக்காது இனிமேல்!

- உள்ளூராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் சரிபாதியாகக் குறைக்க நடவடிக்கை
- பிரதேசசபைகளின் தவிசாளர் முறைமையில் மாற்றம்
- நாடாளுமன்றத் தேர்தல் முறைமையும் மாற்றம்

**கொழும்பு, ஒக்ரோபர் 10**

**நாடாளுமன்றத் தேர்தல் முறைமை தொடர்பிலான தெரிவுக்குழுவொன்றை முன்மொழிவதாகவும், அந்த தெரிவுக்குழு, அடுத்த வருடம் ஜூலை மாதத்துக்குள் தீர்மானம் எடுக்காவிட்டால், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.** 11



## உயிர்கொல்லியின் மற்றொரு அவதாரம்

### சிக்கின போதை வில்லைகள்

கிளிநொச்சி, ஒக். 10
உயிர்கொல்லிபோதைப் பொருள் பாவனை அதிகரித்து வரும் நிலையில், போதை மருந்துகளின் புழக்கமும் 09

## மாவை. செயற்றிறனற்றவர்; பதவி துறந்தார் பரஞ்சோதி

யாழ்ப்பாணம், ஒக். 10
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை செயற்றிறனாக - வினைத்திறனாக முன்நகர்த்துவதற்கு கட்சித் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா தவறிவிட்டார். இதனால் கட்சியின் சகல பொறுப்புக்கள் - பதவிகளிலிருந்தும் விலகுகின்றேன் என்று வடக்கு 11

## மீண்டும் இலங்கைக்குள் நுழைகிறார் சொல்ஹெய்ம்

கொழும்பு, ஒக். 10
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்புக்கு இணங்க நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவரான எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கையில் நெருக்கடிக்கு உள்ளாகி 09



## காலிமுகத்திடலில் நேற்றுப் பதற்றம்

- நினைவுகூரலுக்கு இடமளியாது துரத்தித் துரத்தி குண்டுக்கட்டாக கைது செய்த பொலிஸார்
- குழந்தைகளையும் இழுத்துச் சென்ற அவலம்
- போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் அடி உதை

விரிவு - பக்.09

## பலாலி - சென்னை விமானசேவை ஆரம்பம்

### கொழும்பு ஊடகம் தகவல்

கொழும்பு, ஒக். 10
பலாலிக்கும் சென்னைக்கும் இடையிலான விமான சேவை மூன்று வருடங்களுக்குப் பின்னர் அடுத்த வார தொடக்கத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தத் தகவலை 12

## விபுலானந்தர், பாரதியார் சிலைகள் நேற்று திறப்பு



யாழ்ப்பாணம், ஒக். 10
சுவாமி விபுலானந்தர் மற்றும் பாரதியாரின் உருவச் சிலைகள் நேற்று மு.ப. 10:30 மணியளவில் அகில இலங்கை சைவ 09

### ஜப்பான் தூதரக வாகன விவகாரம்;

## எனக்குத் தெரியாமல்தான் ஆணையாளர் கடிதம் எழுதினார்

### இப்படிச் சொல்கிறார் முதல்வர் மணிவண்ணன்

யாழ்ப்பாணம், ஒக். 10
ஜப்பான் தூதரகம் வழங்க விருந்த வாகனங்களுக்காக வைப்பிலிட்ட பணத்தை மீள ஒப்படைப்பது தொடர்பான கடிதத்துக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எனக்குத் தெரியாமல்தான் யாழ். மாநகர ஆணையாளர் 09

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாணய நிதியத்துடன் அடுத்த சுற்றுப் பேச்சு விரைவில்

**கொழும்பு, ஒக்.10**

**சர்வதேச நாணய நிதியத்துடனான அடுத்த சுற்றுப் பேச்சை எதிர்வரும் வாரம் முன்னெடுப்பதற்கு இலங்கை திட்டமிட்டிருக்கின்றது.**

நிதி இராஜாங்க அமைச்சரும், திறைசேரியின் செயலாளரும் மத்திய வங்கி அதிகாரிகளும் அடுத்த வாரம் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளைச் சந்திக்க வுள்ளனர் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

'சர்வதேச நாணய நிதியத்துடன் உத்தியோகத்தர்மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டதைத்தொடர்ந்து, நாம் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதை இலக்காகக்கொண்டு இருதரப்பு மற்றும் பல்தரப்புக் கடன் வழங்குநர்களுடன் பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றோம்.

தெளிவூட்டல் காட்சிப்படுத்தல் மூலம் கடந்த மாதம் 23 ஆம் திகதி இதுகுறித்து அனைத்துக் கடன் வழங்குநர்களுக்கும் விளக்கமளித்தோம்.

இருதரப்புக் கடன் வழங்குநர்களுடனான பேச்சுகளையும் முன்னெடுத்திருக்கின்றோம்' என்று ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஜனாதிபதியின் ஜப்பான் பயணத்தின்போது அந்த நாட்டு உயர்மட்ட அதிகாரிகளுடனும், இங்கிலாந்து பயணத்தின் போது அரச தலைவர்கள் சிலருடனும், மணிலாவில் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளுடனும் பேச்சுகள் நடத்தப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடன்மறுசீரமைப்பின் ஊடாக மீளச்செலுத்த வேண்டியுள்ள கடன்களின் அளவைப் பெருமளவுக்குக் குறைத்துக்கொள்வதன் மூலம் வெளிநாட்டுக் கையிருப்பின் அளவை சாதகமான மட்டத்துக்குக் கொண்டுவருவதற்கும், முதலீட்டாளர்கள் மத்தியில் மீண்டும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ)

# கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பேச்சு!

கொழும்பு, ஒக்.10

கடன் மறுசீரமைப்பு, பொருளாதாரக் கொள்கை தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தலைமையிலான இலங்கை பிரதிநிதிகள் சர்வதேச நாணய நிதியத்தினதும், உலக வங்கியின் பிரதிநிதிகளுடன் விரிவான பேச்சில் ஈடுபடவுள்ளனர். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் வருடாந்த மாநாடு நேற்று முதல் எதிர்வரும் 16ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டில் கலந்துகொள்ள நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அமெரிக்கா சென்றுள்ளனர்.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதேநேரம், கடன் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார மீட்சிக்கான கொள்கை திட்டங்கள் தொடர்பில் இலங்கையின் பிரதிநிதிகள், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகளுடன் பேச்சில் ஈடுபடவுள்ளனர்.

முன்னெடுக்கப்படும் பேச்சுக்கள் தொடர்பான சகல விடயங்களும் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்படும். இந்த வருடத்துக்குள் நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். (ஏ)

# 35 உடன்படிக்கைகள் விரைவில் நடைமுறை

கொழும்பு, ஒக்.10

பல்வேறு நாடுகளுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள சுமார் 35 வர்த்தக உடன்படிக்கைகளை விரைவாக மீள நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள சர்வதேச வர்த்தக அலுவலகம், நிதி அமைச்சு, மத்திய வங்கி, வர்த்தக அமைச்சின் வர்த்தக திணைக்களம் மற்றும் வெளிவிவகார அமைச்சு என்பன இணைந்து இந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளன என அமைச்சின் செயலாளர் எஸ்.ரி.கொடிகார தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டின் பின்னர் பெரும்பாலான வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல்கள் பல்வேறு காரணங்களால் முறிவடைந்துள்ளன என்றும் செயலாளர் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள வரிகளை விடுவித்து நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்று வர்த்தக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதன்கீழ் சிங்கப்பூருடனான தற்போதைய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மேலும் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் செயலாளர் குறிப்பிட்டார். இதைத் தவிர, இந்தியா, தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளுடன் கைச்சாத்திடப்பட்டும் தற்போது செயற்படாமல் உள்ள வர்த்தக ஒப்பந்தங்கள் விரைவில் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. அதேநேரம் இந்தோனேஷியாவுடன் புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ஏ)

# பொலிஸ் பதிவுக்கு பொலிஸார் விளக்கம்

கொழும்பு, ஒக்.10

கொழும்பில் பல பகுதிகளில் வீடுகளில் மேலதிகமாக தங்கியிருக்கும் வெளிநபர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான பதிவுகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனப் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

கொழும்பில் பல பகுதிகளில் வீடுகளில் மேலதிகமாக தங்கியிருக்கும் வெளிநபர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

வீடுகளில் வெளிநபர்கள் தங்கியிருந்தால் அதனைக் கட்டாயம் பொலிஸாருக்கு அறிவிக்கவேண்டும்.

போதைப்பொருள் கடத்தல்கள் மற்றும் ஏனைய குற்றங்களைத் தடுப்பதற்காகப் பொலிஸ் கட்டளைச் சட்டத்திலுள்ள அதிகாரங்களின் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு இவ்வாறு பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன- என்றார். (ஏ)

# இருவர் கைது

கொழும்பு, ஒக்.10

கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகளுடன் தொடர்புடைய மேலும் இரு சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கண்டி மற்றும் அலவ்வ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் திட்டமிட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மற்றும் இராஜாங்க அமைச்சர் ஷாந்த பண்டார ஆகியோரின் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை மற்றும் அவற்றுக்கு தீ மூட்டியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 21 மற்றும் 24 வயதுடைய கண்டி மற்றும் மஹரவவிமுல்ல பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஏ)

# பஸிலின் தலையிட்டால் 22ஆவது திருத்தம் கிடப்பில்

கொழும்பு, ஒக்.10

அரசமைப்பின் 22 ஆவது திருத்தம், முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவின் தலையீட்டின் காரணமாகவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாமல் பிற்போடப்பட்டுள்ளது. தற்போதைய நாடாளுமன்றத்தில் இருந்து இனியும் எந்த நன்மையான விடயங்களையும் எதிர்பார்க்கமுடியாது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.

ருவன்வெல்ல தொகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

22 ஆவது அரசமைப்புத் திருத்தம்



நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று முழு நாடும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. 22 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டது.

ஆனால், என்ன நடந்தது? திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று கூறப்பட்ட தினத்துக்கு முதல்நாள், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி திருத்தத்தை அவர்களில் பெருமளவானோர் எதிர்க்கின்றனர் என்று கூறினார். நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்த 22 ஆவது திருத்தத்தைப் பிற்போட்டனர். இன்று நாட்டிலும் இல்லாத பஸில் ராஜபக்ச பொதுஜன பெரமுனவை நிர்வகிக்கின்றமையே இதற்கான காரணமாகும்.

கோப் குழுவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பேராசிரியர் ரஞ்சித் பண்டார பஸில் ராஜபக்சவின் பிரதிநிதியாவார். ஆனால், இந்தப் பதவிக்கு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரே நியமிக்கப்படுவார் என்று நாம் எதிர்பார்த்திருந்தோம்.

இந்த நாடாளுமன்றத்திடமிருந்து எமக்குப் பெரிதாக எதனையும் எதிர்பார்க்கமுடியாது - என்றார். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையூட்டல் மற்றும் மோசடிகளுக்கு எதிராகக் கடுமையான புதிய சட்டம்!

கொழும்பு, ஒக்.10

கையூட்டல் மற்றும் மோசடிகளுக்கு எதிராக புதிய சட்ட வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டம், சட்டவரைவின் கீழ் குற்றத்தைச் செய்ததாக சந்தேகிக்கப்படும் எந்தவொரு நபரையும் நீதிவானின் உத்தரவு அல்லது பிடியாணை இல்லாமல் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் கைது செய்ய ஒரு சுயாதீன ஆணைக் குழுவை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபரை அதிகபட்ச காலம் 24 மணிநேரம் தடுப்புக்காவலில் வைத்திருக்க முடியும். உத்தேச சட்டத்தின் கீழ் இலங்கைக்கு வெளியில் எந்தச் செயலையும் செய்திருந்தால் (யாருக்கு எதிராக நியாயமான முறைப்பாடு, சந்தேகம் அல்லது நம்பத்தகுந்த தகவல் இருந்தால்) அவர்களைக் கைது செய்யலாம்.

ஒருநபர் ஒரு குற்றத்தைச் செய்துள்ளார், செய்கிறார் அல்லது செய்யப்போகிறார் என்று சந்தேகிக்கப்பட்டால் அல்லது நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால், எந்தவொரு நடத்தையையும் இரகசியமாகக் கண்காணிப்பதற்கும், எந்தவொரு தகவல் தொடர்புகளையும் பதிவு செய்வதற்கும் ஊழலுக்கு எதிரான பிடியாணைக்கு சுயாதீன ஆணைக்குழுவால் மேல் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கவேண்டும்.

தனித்தனியாக எந்தவொரு தகவல் தொடர்பு அல்லது சேமிப்பக சேவைகள் அல்லது ஏதேனும் தரவு அல்லது தகவல் அல்லது பிற விடயங்களின் சாதனங்கள் தொடர்பான முடக்குதல் அல்லது குறியாக்கச் சேவைகளை வழங்கும் எந்தவொரு நபருக்கும், சேவை அல்லது உபகரணங்களைத் திறக்க மற்றும் கையாள்வதற்கு நீதிவானின் அனுமதியைப் பெறலாம் என்று சட்டவரைவில் உள்ளது.

இந்தச் சட்டவரைவில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவிப்புகள் பற்றிய தனிப் பிரிவு உள்ளது. இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் தங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவிப்புக்களை அவ்வப்போது வெளியிடவேண்டும் என்று பொதுத்துறை அதிகாரிகளைக் கட்டாயப்படுத்த வலியுறுத்துகிறது.

அத்தகைய அறிவிப்புக்களைச் சமர்ப்பிப்பதற்கான ஒரு மையப்படுத்தப்பட்ட மின்னணு அமைப்பை இது வழங்குகிறது மற்றும் பொருத்தமான அதிகாரிகளால் அத்தகைய அறிவிப்புகளை மேற்கோள்காட்டவும் விசாரணைகளை நடத்தவும் அனுமதிக்கிறது.

சட்டமானது பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு எதிராக பாதுகாப்பை வழங்குகிறது. குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு நீதிவான் முன் சுருக்கமுறை விசாரணைக்குப் பின்னர் குற்றவாளியாகக் காணப்பட்டால் அந்த நபருக்கு 2 லட்சம் ரூபாவுக்கு விஞ்சாத தண்டம் அல்லது 10 ஆண்டுகளுக்கு விஞ்சாத சிறைத்தண்டனை அல்லது இரண்டு தண்டனைகளும் விதிக்கப்படலாம் என்று அந்தச் சட்ட வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது. 108 பக்கங்கள் கொண்ட ஊழல் தடுப்பு சட்ட வரைவு பொது மக்களின் கருத்துக்காகப் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

(எ-இ)

## பாலின் விலையை அதிகரிக்க கோரிக்கை

கொழும்பு, ஒக்.10

ஒரு லீற்றர் பாலின் விலையை 200 ரூபா வரையில் அதிகரிக்க வேண்டும் என்று சிறிய பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது திருத்தப்பட்டுள்ள வரிகள் காரணமாக கால் நடைத் தீவனங்களின் விலைகள் அதிகரித்தமை, புற்கள் வெட்டும் இயந்திரங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டமை மற்றும் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமை போன்றவற்றால் ஒரு லீற்றர் பாலை 100 ரூபாவுக்கு விற்பது போதுமானதாக இல்லை என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகளை வழங்காமை, அரசாங்கத்தின் ஊடாக வழங்கப்பட வேண்டிய நிவாரணம் உரிய வகையில் வழங்காமை உள்ளிட்ட காரணிகளால் இந்தத் தொழிற்றுறை வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டுள்ளது என்று சிறிய பால் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

## சபுகஸ்கந்த நிலையத்தில் தரம் குறைந்த பெற்றோல்!

கொழும்பு.ஒக்.10

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தால் சுத்திரிகரிக்கப்பட்டு சேமிக்கப்பட்டுள்ள பெற்றோல் தரம் குறைந்தது என்பது தெரியவந்துள்ளது.

அங்கு சுத்திரிகரிக்கப்படும் பெற்றோலின் தரம் ஒக்ரேன் 80 முதல் 82 வரையிலேயே காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது என்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் தலா 2 ஆயிரத்து 400 மெற்றிக் தொன் எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டுள்ளது. சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலைய செயற்பாட்டு முகாமையாளர் ஹரீந்திர கோதாகொட, இந்த சுத்திகரிப்பு நிலையம் குறைந்த தரம் கொண்ட 80-85 ஒக்ரேன் பெற்றோலையே சுத்திகரித்து சேமித்து வைத்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

குறைந்த தரப் பெற்றோல் இருப்புக்கள் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று கேட்டபோது, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அவற்றை ஒக்ரேன் 92 தரத்துக்கு மேம்படுத்தி உள்ளூர் சந்தைக்கு வழங்கும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - தரம் குறைந்த எரிபொருள் சந்தைக்கு வழங்கப்படுகின்றது என்று



சாரதிகள் மற்றும் நுகர்வோர் அதிகார சபையால் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும், பல எரிபொருள் மாதிரிகள் ஆய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். (எ)



## சிறாருக்கு மது பருக்கிய இளைஞன் கைது

கொழும்பு, ஒக்.10

சிறுவர்கள் இருவரை கட்டாயப்படுத்தி மது பருக்கிய குற்றச்சாட்டில் 25 வயது இளைஞர் ஒருவர் ஓயமடுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட இரண்டு சிறுவர்களும் பத்து மற்றும் ஐந்து வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸ் அவசர சேவை 119 ஊடாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.

இரு சிறுவர்களும் தற்போது அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 25 வயதுடைய சந்தேக நபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ)

## எனக்கு 15 உனக்கு 19 சிக்கிய மணமக்கள்!

சௌருபுர பிரதேசத்தில் உள்ள வரவேற்பு மண்டபம் ஒன்றில் நேற்றுக் காலை அங்குலான பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையில் திருமண சம்பிரதாய உடையுடன் வயது குறைந்த மணமக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே பொலிஸார் இந்தச் சுற்றிவளைப்பை முன்னெடுத்திருந்தனர். கைதுசெய்யப்பட்ட மணப்பெண்ணுக்கு 15 வயது என்றும் மணமகனுக்கு 19 வயது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இருவரும் நீண்ட நாள்களாகக் காதலித்துள்ளனர். இவர்களின் காதலுக்கு சிறுமியின் பெரிய தந்தை எதிர்ப்புத் தெரிவித்ததால், சிறுமி காதலனுடன் தப்பிச் சென்று மகொன பிரதேசத்தில் உள்ள உறவினர் வீட்டில் கணவன் மனைவியாக வசித்து வந்துள்ளனர். அதையடுத்து உறவினர்கள் தலையிட்டு திருமணத்தை நடத்த முயன்றுள்ளனர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ)


## பணி வெற்றிடம்

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இயங்கும் முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு கீழ்வரும் பணி வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை.

**மின் இணைப்பாளர் - Eectrician**
**குழாய் நுட்பவியலாளர் - Plumber**
**சுத்திகரிப்பு பணியாளர் - Maintenance staff**

அனுபவத்துக்கு ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு:- 071 411 5000**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவ சமூகத்தினரிடம்

# உயிர்கொல்லி ஹெரோய்ன் அதிதீவிரமாகப் பரவுகிறது!

## வவுனியா தெற்கு கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

**வவுனியா, ஒக். 10**

**மாணவர்களிடையே போதைப்பாவனை தினமும் தொற்றுநோய் போல பரவுகின்றது. இதனால் பெற்றோர் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்று வவுனியா தெற்கு கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் தட்சாயினி வசீகரன் தெரிவித்துள்ளார்.**

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற பாடசாலை அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

வடக்கில் தற்போது மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. மாணவர்களை பராமரிப்பது ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் ஒரு சவாலான விடயமாகக் காணப்படுகின்றது. அதிலும் வடக்குப் பகுதியில் இந்த நிலைமை மோசமாகவுள்ளது. மாணவர்கள் பாடசாலை கற்றல் நேரங்களைவிடவும் வீட்டில் பெற்றோருடன்தான் அதிக நேரங்களைச் செலவிடுகின்றனர்.

ஆதலால் பெற்றோர் தமது பிள்ளைகளை இனங்காண்பது மிகமிக இலகுவான விடயமாகவுள்ளது.

எனவே, பெற்றோர் தம் பிள்ளைகளின் நடத்தைகளைக் கண்காணித்து அவர்களிடம் ஏற்பட்டுள்ள மாற்றத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு மாணவன் போதைப்பொருள் பாவனைக்கு உட்பட்டுவிட்டால் அது ஏனைய மாணவர்களிடம் விரைவாகப் பரவுகிறது. எனவே, எமது மாணவ சமூகத்தை மிக அவதானமாகக் கண்காணிக்க - கட்டிக்காக்க வேண்டியது எமது கடமை - என்றார். (ம-14)

பிரதேச செயலகத்தின் அனுமதியுடன்

# மாந்தை கிழக்குப் பகுதியில் சட்டவிரோதமான செயல்கள்

## அந்தப் பகுதி மக்கள் குற்றச்சாட்டு பிரதேச செயலர் திட்டவட்டமாக மறுப்பு

மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக காடழிப்பு மற்றும் மண்ணகழ்வு போன்றன சட்டவிரோதமாக இடம்பெறுகின்றன. அதனைக் கட்டுப்படுத்த பிரதேச செயலகம் மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுக்காது சட்டவிரோதச் செயல்களுக்கு மறைமுக அனுமதிகளை வழங்குகின்றனர் -இவ்வாறு அந்தப் பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் தெரிவித்ததாவது:-

மாந்தை கிழக்கின் மாபியாக்கள் என மக்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நபர்களைப் பொலிஸார் பாதுகாப்பதுடன், மாந்தை கிழக்குப் பிரதேச செயலரும் குடியேற்ற உத்தியோகத்தரும் சட்டவிரோத காடழிப்புக்கு உதவிகளையும் செய்து வருகின்றனர்.

இந்த நபர்கள் மீது குற்றச்சாட்டை முன்வைக்கும் மக்கள் மீது, இரவு நேரங்களில் தாக்குதல்களை மேற்கொள்வதும் பின்னர் பாதிக்கப்பட்ட நபர்கள் பொலிஸ் நிலையத்தில் முறையிடச் சென்றால் பொலிஸார் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும் தொடர்கதையாகி வருகின்றது. அத்துடன் மாந்தை கிழக்குப் பிரதேசசெயலக குடியேற்ற உத்தியோகத்தரால், சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்ட நபர்களுக்கு பிரதேச செயலரின் அனுமதியுடன் காணி வழங்கப்பட்டிருக்கின்றது. எந்தவொரு காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டத்திலும் காணிக்கான விண்ணப்பங்கள் வழங்கப்படாமலேயே குடியேற்ற உத்தியோகத்தரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அந்தப்பகுதியிலுள்ள 5 ஏக்கருக்கும் மேற்பட்ட அரசகாணிகளில் அத்துமீறி அபிவிருத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலகத்தில் முறையிட்டால் குறிப்பிட்ட நேரத்துக்குள் சம்பந்தப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து மிரட்டும் தொனியில் அலைபேசி அழைப்பு வருகின்றது - என்றனர். இது தொடர்பில் மாந்தை கிழக்குப் பிரதேச செயலருடன் தொடர்புகொண்டபோது அவர் தெரிவித்ததாவது:-

பிரதேசசெயலக அனுமதியுடன் எந்தவொரு சட்டவிரோதச் செயல்களும் இடம்பெறவில்லை. மாறாக பிரதேசசெயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக இடம்பெறும் மண்ணகழ்வு, காடழிப்பு, காணி அபகரிப்பு போன்றவற்றுக்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைவிடுத்து எந்தவொரு ஆதாரங்களுமின்றி பிரதேச செயலர் மீதும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மீதும் குற்றச்சாட்டுக்கள் வைப்பது முறையானதல்ல - என்றார். (ம-14-19)

# யாழில் 36 பயனாளர்களுக்கு வீட்டுத்திட்டக் கொடுப்பனவு

தேசிய வீடமைப்பு அதிகாரசபையால், யாழ். மாவட்டத்திலுள்ள ஏழு பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பொருண்மியம் நலிவடைந்த 36 பயனாளர்களுக்கு, 2022 ஆம் ஆண்டுக்கான "செவன மானிய" வீட்டுத் திட்டத்தின் முதலாம் கட்டக் கொடுப்பனவு யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

இதில் முதற்கட்டமாக 12 பயனாளர்களுக்கு மானிய உதவிகள் வழங்கப்பட்டன. யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன், மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன், காணி மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு பயனாளர்களுக்கான முதலாம் கட்டக் கொடுப்பனவைக் கையளித்தனர். (ஒ-14-27)



# இராமநாதபுரம் காவலரண் பொலிஸ் நிலையமானது

கிளிநொச்சி, ஒக். 10

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை காலமும் பொலிஸ் காவலரணாகச் செயற்பட்டு வந்த இராமநாதபுரம் பொலிஸ் காவலரண், கிளிநொச்சி மாவட்டத்தின் 7ஆவது பொலிஸ் நிலையமாக கடந்த வெள்ளிக்கிழமை முதல் மாற்றப்பட்டுள்ளது.

புதிதாக மாற்றப்பட்ட இராமநாதபுரம் பொலிஸ் நிலையம் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் திறந்து வைக்கப்பட்டது. (ம-14-113)

# உடைமையில் வாள்: இளைஞர் கைதானார்

யாழ்ப்பாணம், ஒக். 10

வாள் ஒன்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையிலேயே மேற்படி இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ம-125)




# சிறுபான்மையினரின் உரிமைக்காக இரணைமாதா நகரில் போராட்டம்!

மன்னார், ஒக். 10

கௌரவமான உரிமைகளுடன்கூடிய அரசியல் தீர்வை வலியுறுத்தி, வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் முன்னெடுக்கப்பட்டுவரும் 100 நாள்கள் செயற்றிட்டத்தின் 70ஆவது நாள் கவனவீர்ப்பு நடவடிக்கை இரணைமாதா நகரில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கவனவீர்ப்பில் ஈடுபட்ட மக்கள், தமிழ் பேசும் மக்களுக்கு நீதியான தீர்வு வழங்கப்படவேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் உள்ளிட்ட கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-213)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## திறக்கப்படுமா ராஜபக்சக்களின் ராஜபாட்டை?

**த**மது அடுத்த கட்ட ஆட்டத்துக்கு களுத்துறையில் அத்திபாரம் போட்டிருக்கிறார்கள் ராஜபக்சக்கள். 'அரகலய' போராட்டத்துக்குப் பின்னர் வெளியே தலைகாட்டக்கூட பயந்திருந்த ராஜபக்ச கும்பல் இப்போது ஆயிரக்கணக்கானோரைத் திரட்டி வந்து 'மூன்றாவது முறையாக மஹிந்தவுக்கு முடிசூடும் படலத்தை' தொடக்குமளவுக்கு, அவர்களுக்குச் சாதகமாக களநிலையை மாற்றிக் கொடுத்தவர், அதே ராஜபக்சக்களின் பரமவைரியாக ஒருகாலத்தில் அடையாளப்படுத்தப்பட்ட ரணில் விக்கிரமசிங்கதான். ஏழுமூளைகள் கொண்டவர் என்று மொட்டுக் கட்சியினரால் புகழப்படும் பஸில் ராஜபக்சவால் கூட முடியாத காரியத்தை ரணில் சர்வசாதாரணமாகச் செய்துமுடித்தமையால்தான் 'ரணில் நம்மவர்' என்று மஹிந்தவே மகிழ்ச்சிக்கூத்தாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, அவரின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உதிரிகளாக விழுந்த வாக்குகளைக் கூட்டிப் பொறுக்கியதில் தேறிய ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தின் மூலம் நாடாளுமன்றத்துக்கு வந்து, அப்படியே பிரதமர் பதவியைப் பிடித்து, அங்கிருந்து ஒரே பாய்ச்சலில் தனது நீண்டநாள் கனவான நிறைவேற்று அதிகாரக் கதிரையில் அமர்வாரென்று எவரும் கனவுகூட கண்டிருக்கமுடியாது. ஆனால், அப்படி நம்பமுடியாத விடயங்கள் அரங்கேறி, ஜனாதிபதியாக ரணில் தெரிவானவுடனேயே 'ராஜபக்ச கும்பல்தான் ரணிலை வைத்து ஆட்டம் காட்டுகின்றது' என்ற குற்றச்சாட்டு பலமுனைகளில் இருந்தும் எழுந்தது. அவையெல்லாவற்றையும் ரணில் மறுத்தார். ஆனால், அதன் பின்னர் அவர் செய்த, செய்கின்ற காரியங்கள் எல்லாமே ராஜபக்சக்களின் மூன்றாவது அலைக்கான மூலோபாய நடவடிக்கைகளாகவே இருக்கின்றன. குறிப்பாக , காலிமுகத்திடலில் குடியிருந்த 'அரகலய' போராட்டக்காரர்களை அங்கிருந்து அகற்றியமை, போராட்டக்காரர்களை ஒருவர் கூட மிச்சம் விடாமல் கைது செய்தமை, பயங்கரவாதத்தடைச்சட்டத்தை பிரயோகித்தமை, அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியமை என்று ஈவிரக்கமற்ற சர்வாதிகாரியாக மாறி ரணில் போடுகின்ற ஆட்டங்கள் எல்லாமே அவருக்கானதல்ல, ராஜபக்சகும்பலுக்கானதே.

ரணில் எதற்காக ராஜபக்ச கும்பலின் விசுவாசியாக, அவர்களின் மீளெழுகைக்காக இவ்வளவு பாடுபட வேண்டும்? ஏனெனில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக வேண்டுமென்பது ரணிலின் நெடுநாள் கனவு. இனிமேல் அது நடக்கவே நடக்காது, ரணிலின் அரசியல் அவ்வளவுதான் என்றிருந்த நிலையில், அந்தப் பதவி நழுவி ரணிலின் மடியில் விழுந்தமைக்கும் அதைச் சாத்தியமாக்கியமைக்கும் மூலகாரணிகள் ராஜபக்சக்களே. எனவேதான் அதற்கு நன்றிக்கடனாக மீண்டும் ராஜபக்சக்களின் ராஜபாட்டைக்கான கதவுகளை தன்னாலியன்றவரைக்கும் திறந்துவிட ரணில் முயல்கின்றார். இந்த நடவடிக்கைகள் ராஜபக்ச கும்பலுக்கும் மீண்டும் துணிச்சலை வரவழைத்து, களுத்துறையிலே நடந்த பிரமாண்டமான கூட்டத்திலே ரணிலை வாயாரப் புகழுமளவுக்குச் சென்றுள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால் இது நாள்வரை ராஜபக்ச குடும்பத்தின் எழுச்சிக்கு மாடாக உழைத்து, ஓடாகத் தேய்ந்த விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில ஆகியோரை கிழிகிழியென்று கிழித்த மேடையிலே, ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துமழை பொழிந்திருக்கிறது.

அரசியல் என்பது பரமபதம். ஏற்றமும் இறக்கமும் , நட்பும் பகையும், தியாகமும் துரோகமும் எப்போது வேண்டுமானாலும் அரசியலில் நிகழும். அதைத்தான் இப்போது இலங்கை அரசியலில் நாம் கண்கூடாகக் கண்டுகொண்டிருக்கிறோம். ஆனாலும், பரமபத விளையாட்டில் காய்கள் தம்பாட்டில் நகர்வதில்லை.அவை எவ்வளவு தூரம் நகரவேண்டுமெனத் தீர்மானிப்பவை தாயக்கட்டைகள்தான். அதுபோலவே என்னதான் அரசியல்வாதிகள் ஆட்டம் போட்டாலும், அவர்களின் இருப்பைத் தீர்மானிக்கப்போவது மக்களே. கடந்த காலங்களைப்போன்று மீண்டும் ராஜபக்சகளின் பசப்பு வார்த்தைகளை நம்பி, மக்கள் தம் வாக்குகளையும், எதிர்காலத்தையும் பலியிடமாட்டார்கள் என்பது பொதுவான நம்பிக்கை. அப்படியல்லாமல் 'கெடுகிறோம், பந்தயம் பிடி' என்று மீண்டும் ராஜபக்சக்களை ஆட்சிக்கட்டிலில் சிங்கள மக்கள் அமரவைப்பார்களானால், எந்தக்காலத்திலும் இலங்கைக்கு மீட்சியென்பதே இல்லாமற்போய்விடும்.

நாளொரு நல்வார்த்தை

"மகானைப் போல நீ வாழ வேண்டும் என்றில்லை மனச்சாட்சியின் படி வாழ்ந்தாலே போதும்"

- புத்தர்




# வெளிவிவகாரக் கொள்கையை உடன் திருத்தம் செய்யுங்கள்!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி வலியுறுத்து



**கொழும்பு, ஒக். 10**

**சர்வதேசத்தைப் பகைத்துக்கொண்டு தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து ஒருபோதும் மீண்டெழுமுடியாது. ஆகவே, வெளிவிவகாரக் கொள்கையைத் திருத்தம் செய்வது மிகவும் அவசியம் - இவ்வாறு சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்:

"இலங்கையின் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் 2015 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் சர்வதேசம் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியது. ஊழல், மோசடிகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் குறித்து சர்வதேச அரங்கில் தொடர்ச்சியாகப் பேசப்பட்டு இலங்கையை சர்வதேச நாடுகள் புறக்கணிக்கும் நிலை காணப்பட்டது.

2015ஆம் ஆண்டு மக்கள் ஆணையுடன் நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சர்வதேசத்தின் ஒத்துழைப்பையும், நன்மதிப்பையும் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தேன். நல்லாட்சி அரசு சர்வதேசத்தின் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றது.

கடந்த இரண்டரை வருட காலத்துக்குள் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொருளாதார நெருக்கடி குறித்து சர்வதேசம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. இலங்கையில் பொருளாதாரப் பாதிப்புக்கான காரணத்தை சர்வதேசம் பகிரங்கமாக அறிவித்துள்ளது.

"இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பில் ஐ.நா.வின் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு 20 நாடுகள் ஆதரவாகவும், 7 நாடுகள் எதிராகவும் வாக்களித்துள்ளதுடன், 20 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட பெரும்பாலான நட்பு நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் நடுநிலை வகித்துள்ளமை தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டும். ஜப்பான், இந்தியா உள்ளிட்ட நாடுகளின் தீர்மானம் இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் மனித உரிமைகள் தொடர்பான நிலையை வெளிப்படுத்தியுள்ளது" - என்றார். (ம-22)

# வெளிநாட்டுப் பணவரவு அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 10

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் 325 மில்லியன் டொலராக இருந்த வெளிநாட்டுப் பணியாளர்கள் அனுப்பிய பணம் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 359.3 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதேநேரம் இந்த வருடத்தின் ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையில் வெளிநாட்டுப் பணியாளர்கள் அனுப்பிய பணம் 2 ஆயிரத்து 574 மில்லியன் டொலராகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய வங்கி மேலும் அறிவித்துள்ளது.

(ம)

**நாளை** 11.10.2022 செவ்வாய்க்கிழமை புரட்டாதி - 24

சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம்: 03.02 - 04.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்கைக் கால் பொருத்தும் முகாம்

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம், வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து செயற்கைக்கால் பொருத்தும் முகாமை எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் முல்லைத்தீவு மாவட்ட பயனாளிகளுக்கான எழுகை மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் மண்டபத்தில் நடத்தவுள்ளது.

அதற்கமைய செயற்கைக்கால் பொருத்த விரும்பும் பயனாளிகள் புதுக்குடியிருப்பு சமூகசேவைகள் உத்தியோகத்தருடனோ அல்லது யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன வெளிக்கள உத்தியோகத்தருடனோ தொடர்பு கொள்ளுமாறு யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் மருத்துவ கலாநிதி திருமதி ஜெ.கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (எ-14)

# தமிழ்மக்களின் பிரச்சினைகள்; ஜனாதிபதி, பிரதமருடன் பேச்சு

### மஹிந்த அமரவீர கூறுகிறார்



**கொழும்பு, ஒக்.10**

**குருந்தூர்மலை பிரச்சினை உள்ளிட்ட தமிழ் மக்களின் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது என்று கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை குருந்தூர்மலை ஆதிசிவன் கோயில் ஆக்கிரமிப்பு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைத்த கூற்றுக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்:

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைத்த குருந்தூர்மலை பிரச்சினைகளை நான் குறைத்து மதிப்பிடவில்லை.

குருந்தூர்மலை பிரச்சினை உள்ளிட்ட தமிழ் மக்களின் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த விடயத்தில் நான் தனிப்பட்ட ரீதியிலும் கவனம் செலுத்துவேன். எந்த விதத்திலும் எவரும் இனவாதமாகச் செயற்படுவதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்காது. நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் சமமாக மதிக்கப்படுபவர். நாட்டின் அபிவிருத்தி உட்பட அனைத்து நடவடிக்கைகளுக்கும் அதுவே அவசியமாக உள்ளது- என்றார். (எ-14,22)



## துப்பாக்கிச்சூடு; 35 பேர் கொலை!

கொழும்பு, ஒக். 10

இந்த வருடத்தின் மே மாத இறுதி முதல், 4 மாத காலப் பகுதிக்குள் தெற்கில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் மொத்தமாக 35 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ்அத்தியட்சகர்நிஹால் தல்துவ நேற்றுமுன்தினம் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தக் காலப்பகுதியில் 29 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதில் மொத்தம் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

பல்வேறு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் 64 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 15 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பில் சந்தேகநபர்களைக் கைதுசெய்வதுடன் அவர்கள் வசமுள்ள ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்கான விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன- என்றார்.(எ-14,22)

## மீன்பிடிக்கலங்கள் விலையுயர்வு; மன்னாரில் மாற்று புதிய ஏற்பாடு

மன்னார், ஒக்.10

மீன்பிடிக்கான கலங்களின் விலையுயர்வைக் கருத்திற்கொண்டு மன்னார் மீனவர்களுக்கு மாற்று ஏற்பாடு ஒன்று மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட உதவிப் பணிப்பாளர் சரத் சந்திரநாயக்க தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வள மன்னார் மாவட்ட அலுவலகத்தில் உதவிப் பணிப்பாளர் சரத் சந்திரநாயக்க தலைமையில் மாவட்டத்தின் கடல்சார் உதவிப் பொறியியலாளர் மற்றும் மாவட்டத்தின் 6 கடற்றொழில் பிரிவுகளுக்குப் பொறுப்பான கடற்றொழில் பரிசோதகர்களுடன் கடந்த 4ஆம் திகதி கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் காரணமாக மீனவர்கள் தொழிலுக்குப் பயன்படுத்தும் மீன்பிடிக்கலங்களின் விலைகள் எகிறியுள்ளன.

அதனால் அவற்றைக் கொள்வனவு செய்வதில் பெரும் நெருக்கடியை மீனவர்கள் எதிர்நோக்கியுள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த விலை உயர்வைக் கருத்திற்கொண்டு மீனவர்களுக்கான மாற்று ஏற்பாடு ஒன்று மேற்கொள்ள கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பழைய படகுகளின் பதிவுகளை மீண்டும் ஆரம்பிக்க அனுமதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் தங்கள் படகுகளின் தரத்தை உறுதிப்படுத்த கடல்சார் உதவிப் பொறியியலாளரின் கடற்பகுதி சான்றிதழைப் பெற்று கடற்றொழில் பரிசோதகரிடம் சமர்ப்பித்து தங்கள் படகுகளைப் பதிவு செய்யலாம்.

இதன்மூலம் வசதியற்ற மீனவர்கள் நல்ல நிலையிலுள்ள படகுகளை குறைந்த விலையில் கொள்வனவு செய்து, தங்கள் தொழிலை மேற்கொள்ளமுடியும் எனவும் மாவட்டத்தின் இறங்குதுறையில் தொழிலுக்கு இடையூறாக கவிழ்த்து வைக்கப்பட்டிருக்கும் படகுகள் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பம் உருவாக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (ச-60)

## தேசியசபை உபகுழு தலைவராக நாமல்

கொழும்பு, ஒக். 10



தேசியசபை உபகுழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச கடந்த வெள்ளிக்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசியசபையின் முதலாவது கூட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய உபகுழுக்களுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெயர்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில் உபகுழுவின் தலைவர் பதவிக்கு நாமல் ராஜபக்சவின் பெயரை நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் முன்மொழிந்துள்ளார். அதனை நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் உறுதிப்படுத்தியுள்ளார்.

குறுகிய, இடைக்கால மற்றும் நீண்டகால தேசிய கொள்கைகளை வகுத்தல், வழிநடத்தல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பொதுவான முன்னுரிமைகளை ஏற்படுத்துவதற்கும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவற்குமான வேலைத்திட்டங்களுக்கான இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வதற்காகவும் இந்த உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. (ச-இ)

## பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 10

திருநெல்வேலியில் 1974 ஆம் ஆண்டு வரையிலும் சிறப்பாக இயங்கி வந்த பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்றது.

இதை முன்னிட்டு நூற்றாண்டு விழா மலர் அச்சிட்டு யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படவுள்ளது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி கொழும்பிலுள்ள பழைய மாணவர்களால் நூற்றாண்டு விழா, மலர் வெளியீடு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. அதற்கமைய யாழ்ப்பாணத்தில் இந்த மாத நடுப்பகுதியில் அல்லது இறுதியில் பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மலர் வெளியீட்டை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மலர் வெளியீட்டில் யாழ்ப்பாணத்திலுள்ள பழைய மாணவர்கள் அனைவரும் பங்குபற்ற வேண்டுமென்று பழைய மாணவர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

எனவே, யாழ்ப்பாணத்திலுள்ள பழைய மாணவர்கள் உடனடியாக தங்களது பெயர், விலாசம், படித்த ஆண்டு, அலைபேசி இலக்கம் போன்ற விவரங்களை 0771920271 என்ற கொழும்புக் கிளை அலைபேசி இலக்கம், 077 667 5080 என்ற யாழ்ப்பாணம் கிளை அலைபேசி இலக்கம் ஊடாக குறுந்தகவல் மூலம் அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
தீபாவளி
ஜவுளிக் கொண்டாட்டம்

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான
தலைசிறந்த ஆடைகள்
திருமணப் பட்டுச்சாறிகள்,
கொட்டன் சாறிகள்,
Tops, Party Frocks,
சல்வார்கள்,
சல்வார் துணிகள்,
சேட், T.சேட், சிறுவர்,
சிறுமியருக்கான
ஆடைத் தெரிவுகள்



இந்தியன் செலக்ஷன்
இது பிரமாண்ட ஜவுளித் துறையின்
சாம்ராஜ்யம்

காலம் : 01.10.2022 முதல் 25.10.2022 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்.
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

# ரயிலில் வாள்முனையில் தங்கச்சங்கிலி கொள்ளை

*சந்தேகநபரொருவர் கைது*

கொழும்பு, ஒக். 10

ரயிலினுள் தம்பதியை வாள்முனையில் அச்சுறுத்தி 2 லட்சம் பெறுமதியான தங்கச்சங்கிலியை கொள்ளையடித்துச் சென்ற சந்தேகநபர்கள் இருவரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மற்றையவர் தப்பிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்பு கோட்டையில் இருந்து வாதுவ நோக்கி பயணித்த ரயிலில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

மன்னாரிலிருந்து மொரட்டுவவுக்கு ரயிலில் பயணித்த தம்பதியின் தங்கச் சங்கிலியே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது.

ரயிலினுள் வாள்களுடன் ஏறிய இருவர் மனைவியை அச்சுறுத்தி அவரது கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி அபகரித்து ரயிலிலிருந்து குதித்து தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் அவசர பிரிவுக்கு அறிவித்ததையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த மொரட்டுவ பொலிஸார் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்தனர். இதன்போது ரயிலிலிருந்து குதித்த சந்தேகநபர்கள் இருவரில் ஒருவர் தண்டவாளத்தில் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார். மற்றையவர் கொள்ளையடிக்கப்பட்ட நகையுடன் தப்பிச் சென்றுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தப்பிச் சென்ற சந்தேகநபரை கைது செய்ய மொரட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ச-இ)

## பெயர் மாற்றம்

இல. 81, இளநிலா குடியிருப்பு
முழங்காவிலில் வசிக்கும் **இராசதுரை**
**ஒபதியா** ஆகிய நான் எனது பெயரை
**இராசதுரை அஷ்வின்** என மாற்றம்
செய்வதோடு, இனிவரும் சகல
ஆவணங்களிலும் **இராசதுரை அஷ்வின்**
என்றே கையொப்பம் இடுவேன்
என இலங்கை சோஷலிச குடியரசு
மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**இராசதுரை அஷ்வின்**

(cs 470441) (2.6)

## 31ஆவது நாள் கண்ணீர் அஞ்சலி



அமரர் திருமதி
### மகேந்திரராசா சுசிலாதேவி

எமது நாரந்தனை கல்வி நிலையத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை **செல்வி நிறஞ்சனி மகேந்திரராசா** அவர்களின் பாசமிகு தாயார் கடந்த (10.09.2022) சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்து இன்று 10.10.2022 திங்கட்கிழமை 31 ஆவது நினைவு நாள் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய நாரந்தனை கல்வி நிலைய மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகம் சார்பாக தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

**நாரந்தனை கல்வி நிலையம், நாரந்தனை மக்கள் சங்கம்**
**ஊர்காவற்றுறை**

(CS 470457) (3/6)

## மரண அறிவித்தல்



### திரு. கணபதி சின்னராசா

வேலணை துறையூர் 6ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி சின்னராசா அவர்கள் நேற்று (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி சின்னம்மா தம்பதிகளின் மகனும் ஈஸ்வரியின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரி (நோர்வே) விக்னேஸ்வரன், சிவனேஸ்வரி (பிரான்ஸ்) விஜயசிங்கம் ( ஜேர்மனி) பத்மசிறி (செல்வன் - விக்னா வீடியோ, துறையூர் வேலணை) ஆகியோரின் அன்புத்தந்தையும், கஜேந்திரன் (நோர்வே), ஜெயவாணி, தவபாலன் (பிரான்ஸ்), துலக்சனா (ஜேர்மனி), ஞானகவிதா ஆகியோரின் மாமனாரும், சங்கீதா, அஜந்தா, சுவேதா (நோர்வே), கவி, எழிலன், றெனி, லயா (பிரான்ஸ்) தரணிதரன் ஆகியோரின் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2022) திங்கட்கிழமை பி.ப.2.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக துறையூர் தாழையம்பதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS 21167) (3/6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 10 . 1931



இறப்பு 08 . 10 . 2022

### கனகபூஷணம் பேரம்பலம்

ஊரெழு மேற்கைச் சேர்ந்த கனகபூஷணம் பேரம்பலம் நேற்று முன்தினம் (08.10.2022) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி இளையதம்பி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பேரம்பலத்தின் அன்பு மனைவியும், அன்பழகன், கலைச்செல்வி, அருட்செல்வன், அனந்தரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மாலினி, தணிகாசலம், ஸ்ரீதரி, ஜெயரூபி ஆகியோரின் அன்பு மாமியாரும், மகேஸ்வரி, தவமணிதேவி, காலஞ்சென்றவர்களான இராசநாயகம், செல்வநாயகம், ஜெகநாதன், பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும், பவித்ரா, பிரணீதா, சிவன்யா, சிவயா, சிவமயா, கேசிகா, ஷாம்பவி, பிரவீணா, அஜந்தன், அபிநயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிலா, சேயோன், மாறன், அபிநதி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.10.2022) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு பொக்கணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.56, மின்சார நிலைய வீதி
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 991 9599
077 978 6068

(cs 38209) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினைந்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 03 - 04 - 1978



உதிர்வு 27 - 09 - 2007

அமரர்

### கோபாலபிள்ளை சுபாஸ்கரன் (சுபாஸ்)

(திதி: பிரதமை (10.10.2022)

நித்தமும் எங்கள் நினைவுகளில்
- நிறைந்திருக்கும்
உத்தமனே ! எங்கு சென்றாயோ?
காலம் தந்த சோதனையும் வேதனையும்
மனதை நெருடும் அழியாத காயங்கள்
தினமும் அழுகிறது எம் இதயம் - உங்கள்
நினைவுகளைச் சுமந்தபடி.............

என்றும் உந்தன் நினைவில் வாடும்
குடும்பத்தினர்,
வேலணை மேற்கு- 8

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 10 . 1941



மறைவு 10 . 10 . 2018

### அமரர் சிவயோகன் சரஸ்வதி


அன்பான அம்மாவே
அன்புத் துணைவியே
அன்புடனும் நன்றியுடனும்
நினைவு கூருகின்றோம்
என்றும் எம் உள்ளத்தில்
உயிராய் வாழ்வீர்

தங்கள் பிரிவால் துயருறும்
கணவர் : இ.சிவயோகன் (ஓ.நி.தபால் அதிபர்)
பிள்ளைகள் : சி.சசிந்தன், ம.சசினி, சி.சஞ்ஜீவன்
மருமக்கள் : ச.ஜெயவதனி, கா.மணிவண்ணன், ச.சாளினி,
பேரப்பிள்ளைகள்.

"முருக நிழல்"
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
077 026 8225

(cs 46974) (2.6)

# மரண அறிவித்தல்



## திரு.ஆறுப்பிள்ளை பொன்னுச்சாமி

குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஆறுப்பிள்ளை பொன்னுச்சாமி அவர்கள் நேற்று (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுப்பிள்ளை - கனகம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற மாணிக்கம் - செல்லம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசமணியின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கந்தையா, அன்னமுத்து, கனகலிங்கம், ஆச்சிமுத்து, இராசலிங்கம், அப்புத்துரை மற்றும் தம்பிப்பிள்ளை காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், பரமேஸ்வரராஜா (பிரான்ஸ்), செல்வராசா, செல்வராணி, சந்திரராஜா (ஜேர்மனி), புஸ்பராணி (லண்டன்), விமலராணி, இந்திரராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனலட்சுமி (பிரான்ஸ்), யோகேஸ்வரி, யோகேஸ்வரராஜா, கமலாதேவி (ஜேர்மனி), தர்மலிங்கம் (லண்டன்), புவனேஸ்வரன், ஜெசிதரா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சோபியா, கபில்ராஜ், றகீபன், மதூசன், ஆதவன், அபிநயா, அருட்சனா, அபிரா, ஆதித்யா, அட்ஷயா, அஸ்வினியா, அருணன், அக்ஷஜன், யதுர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காருண்யா, காவியன், தஸ்விதன், கர்சிகன் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமரகோட்டம்,
கோண்டாவில்

078 911 7314
021 205 3724

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த தலைவரென நிருபிக்க தேர்தலை நடத்தவேண்டும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்து

இறுதியாக நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாக தோல்வியைச் சந்தித்தபோதும் சிறந்த தலைவர் என்பதை நிரூபிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலை நடத்த வேண்டும்.

-இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவரை நாடாளுமன்றம் ஜனாதிபதியாக ஏற்றுக் கொண்டுள்ளது. மக்கள் ஆணைக்குப் புறம்பாகவே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மக்கள் தாம் வழங்கிய ஆணையை மீளப்பெற்றதன் காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் பதவியிலிருந்து விலக நேரிட்டது.

இதையடுத்து மக்களால் நிராகரிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எனவே பொருளாதாரத்தில் குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தை எட்ட வேண்டுமாயின் புதிய தேர்தல் ஒன்றின் வாயிலாக மக்களின் புதிய ஆணையைப் பெற வேண்டும்.

தேர்தல் ஒன்றின் வாயிலாக ஜனா நாயகத்தை உறுதிப்படுத்தி பொருளாதாரத் தைக் கட்டியெழுப்புவதற்கான திட்டத்தையே சர்வதேச சமூகமும் ஏற்றுக் கொள்ளும்" - என்றார். (ச-22)

### காலிமுகத்திடலில்...

கடந்த ஏப்ரல் முதல் நடைபெற்ற மக்களின் தன்னெழுச்சி போராட்டம் மற்றும் காலிமுகத்திடல் போராட்டங்களின்போது உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து காலி முகத்திடலில் நேற்று நடைபெற்ற நினைவேந்தலின்போது பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே கடும் சொற்போர் மூண்டது. பின்னர் அது களேபரமாகியது. இதனால் சிலமணிநேரம் அப்பகுதியில் பெரும் பதற்ற நிலையும் உருவானது.

போராட்டகளத்தில் வைத்து இளம் தாயொருவரையும், அவரின் சிறு மகளையும் கைது செய்யுமாறு கட்டளையிட்டு, அவர்களை குண்டுகட்டாக பொலிஸார் தூக்கினர். அதேபோன்று தனது மகனை கையில் தாங்கிப் பிடித்தவாறு கோஷம் எழுப்பிய தந்தையை பொலிஸார் இழுத்துப்பிடித்து கைது செய்தனர். இதன்போது பொலிஸார், தந்தையின் கையிலிருந்து மகனை இழுத்துப் பறித்தெடுத்துச் சென்றனர்.

மக்களின் தன்னெழுச்சி போராட்டத்தின்போது அரசின் அடக்கு முறையாலும், அரச பயங்கரவாதத்தாலும் உயிரிழந்தவர்களுக்கான நினைவேந்தலை நடத்துவதற்கும், ஊழல் மோசடி மற்றும் தற்போதைய பொருளாதார - வாழ்க்கைச்சுமை அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்துவதற்கும் காலி முகத்திடலில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனால் பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. போராட்டக்காரர்கள் அங்கு குவிந்தபோது நிகழ்வுகளை நடத்துவதற்கு பொலிஸார் அனுமதி வழங்கவில்லை. கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தினர். எனினும், போராட்டக்காரர்கள் பின்வாங்கவில்லை. பொலிஸாருடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதன்போது பதற்றநிலை உருவானது. கலகமடக்கும் பொலிஸாரும் குவிந்திருந்தனர்.

போராட்டக்காரர்கள் சிலர் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் குண்டுக்கட்டாகபொலிஸாரால் தூக்கிச்செல்லப்பட்டனர். இதன்போது போராட்டக்காரர்கள் கூச்சலிட்டனர்.

இவ்வாறான பதற்றத்துக்கு மத்தியில் மெழுகுவர்த்திகளை ஏந்தி நினைவேந்தலை நடத்துவதற்கு போராட்டக்காரர்கள் முயற்சித்தபோது அதனையும் பொலிஸார் தட்டி வீழ்த்தி தடுத்து நிறுத்தினர். இதன் பின்னர் போராட்டக்காரர்களை பொலிஸார் துரத்தித் துரத்தி கைது செய்தனர். (அ-ஒ-44)

### மீண்டும்...

யுள்ள பொருளாதாரம் மற்றும் சமூக உறுதிப்பாடு ஆகியவற்றை கட்டியெழுப்புவதற்காக வழங்கக் கூடிய பங்களிப்புத் தொடர்பாக ஆராய்வதற்காகவே அவர் நாட்டுக்கு வரவுள்ளாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் இராஜதந்திரியான எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேயின் வெளிவிவகார ஆலோசகராகக் கடந்த 2000 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு இடம்பெற்ற சமாதான பேச்சுக்களில் ஏற்பாட்டாளராகச் செயற்பட்டு தனது பங்களிப்பை அவர் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### உயிர்கொல்லியின்...

தாராளமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு கைக்குழந்தையுடன் சென்ற பெண்ணிடமிருந்து பெருந்தொகை உயிர்கொல்லி போதை மருந்து வில்லைகள் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக, யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குச் சென்ற பேருந்தை மறித்து சோதனையிட்டனர்.

இதன்போது 777 போதை மருந்து வில்லைகளும், 60 கிராம் கேரளக் கஞ்சா பொதியும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-113)

### எனக்குத்...

தூதரகத்துக்கு கடிதம் எழுதினார் என்று யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் நேற்று தெரிவித்தார்.

யாழ். மாநகர முதல்வரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜப்பானிலிருந்து யாழ். மாநகர சபைக்கு பாவித்த நான்கு கழிவகற்றல் வாகனங்கள் தருவிக்கப்படவிருந்த நிலையில், இறக்குமதிச் செலவுக்காக சுமார் 14 மில்லியன் ரூபா ஜப்பான் தூதரகத்தால் வங்கியில் வைப்பிலிடப்பட்டது. மாநகர முதல்வராக நான் பதவியேற்ற பின்னரும் இதனைக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொண்டும் பலனளிக்கவில்லை.

கடந்த ஏப்ரல் மாதம் பிரான்ஸுக்கு சென்றபோது பிரதி முதல்வர் து.ஈசனை, பதில் முதல்வராக நியமித்துவிட்டுச் சென்றிருந்தேன். நான் இல்லாத காலப் பகுதியிலேயே, தூதரகம் வைப்பிலிட்ட நிதியை மீளச் செலுத்துவது தொடர்பான கடிதம் மாநகர ஆணையாளரால் அனுப்பப்பட்டது.

ஆனால், சபை உறுப்பினர்களில் ஒரு பகுதியினர், தமக்குத் தெரியாமல் எவ்வாறு நிதி திருப்பி அனுப்பப்பட்டது என்று கேள்வி எழுப்பி சபைக் கூட்டத்தை வெளிநடப்பு செய்தது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். எவ்வாறு சபைக்குத் தெரியாமல் கடிதம் அனுப்பப்பட்டது என்பதற்கான பதிலை அந்தக் காலத்தில் பதில் முதல்வராக பணியாற்றிய து.ஈசனிடமே கேட்கவேண்டும் என்றார்.

இதன்போது யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனால் ஜப்பான் தூதரகத்துக்கு அனுப்பப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்ட கடிதம் ஒன்று ஊடகவியலாளர்களுக்கு காண்பிக்கப்பட்டது.

ஆனால், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக யாழ். மாநகர சபையில் பெறப்பட்ட தகவலில், தூதரகத்துக்கு அனுப்பியது என்று வழங்கப்பட்ட கடிதத்துடன் அது ஒத்துப்போகவில்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கிடைக்கப் பெற்ற கடிதத்தில், ஆணையாளரின் ஒப்பத்தின் கீழ் பிரதி என்று குறிப்பிட்டு யாழ். மாநகர முதல்வருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

இது தொடர்பில் ஆணையாளர் அலுவலக வட்டாரங்களிடம் வினவியபோது, யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் ஆலோசனைக்கு அமைவாகவே அந்தக் கடிதம் அனுப்பப்பட்டது என்றும், அந்தக் கடிதத்தின் பிரதி மணிவண்ணனின் மின்னஞ்சல் முகவரிக்கே அனுப்பி வைக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் பதில் முதல்வராக பணியாற்றிய து.ஈசனுக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டது. ஊடகங்களிடம் முதல்வர் வி.மணிவண்ணன் காட்டிய கடிதம், அனுப்பப்படவில்லை என்றும் அது 'வரைவு' என்றும் ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் விளக்கமளித்தன.

இதேவேளை- கடந்த மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பான சர்ச்சை எழுந்தபோது பதிலளித்த முதல்வர் வி.மணிவண்ணன், ' தூதரகத்திலிருந்து மின்னஞ்சல் வந்துள்ளது. அதில் உடனடியாக கையொப்பம் இட்டு அனுப்புமாறு கேட்டுள்ளார்கள் என்று கூறப்பட்டது. நான் அந்த மின்னஞ்சலை படித்துப் பார்த்தேன். அதில் சில பாதகமான அம்சங்கள் இருந்தன. எனவே இதில் கையெழுத்திட்டு அனுப்ப முடியாது என்று நான் கூறினேன். திருப்பி பதில் அனுப்புங்கள் என்று பணித்தேன். அதன்போது தண்டம் எதுவும் செலுத்த முடியாது. நீங்கள் வைப்பிலிட்ட பணத்தை மாத்திரம் தர முடியும் என்று பதிலனுப்புமாறு கூறினேன். அதற்கு ஏற்றவாறு கடித வரைவை மாற்றியமைத்து தூதரகம் திருப்பி அனுப்பியது. இதில் கையெழுத்திட்டு அனுப்புமாறு கூறியது. இதுதான் நடந்தது 'என்று விளக்கமளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5-125)

### விபுலானாந்தர்...

மகாசபை மற்றும் யாழ். மாநகர சபையால் திறந்து வைக்கப்பட்டன.

மானிப்பாய் வீதி ஊடான யாழ். நகருக்கான நுழைவாயிலில் இவை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அகில இலங்கை சைவமகா சபையால் உருவாக்கப்பெற்ற சுவாமி விபுலானந்தரின் சிலை, தென் கையிலை ஆதின குருமுதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் மற்றும் யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையால் உருவாக்கப்பெற்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் சிலை, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மற்றும் யாழ். மாநகர சபை உறுப்பினர் மு.றெமிடியஸ் ஆகியோரினால் திறந்து வைக்கப்பட்டது. (அ-ஒ-125)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



8/10/2022 சனிக்கிழமை அன்று நடைபெற்ற யாழ் பல்கலைக்கழகத்தின் 36 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியில் சிறப்பு பட்டம் பெற்ற

செல்வன் இராசேந்திரன் இராசகுலன்

B.A,PGDE (merit)

அவர்களை நாம் உளமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல பட்டங்களை பெற்று உயர்வடைய இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்

வாழ்த்துபவர்கள்

(மதான குடும்பம்)

அம்மா இ.தங்கமணி

சகோதரிகள் அ.இராசமலர்

சி.தவமலர், ரா.இராணிமலர்

மருமக்கள் ரா.நிருஜனன் ரா.நிருஜா மற்றும்

மு.முகுந்தகுமாரன், ந.சதீஸ், ச.சந்திரிகௌரி,

ச.கஜபரன், ச.கவிமொழி, இ.மதுநிலா

கொயிலாமனை, கொடிகாமம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
09
.
06
.
1941



இறப்பு
08
.
10
.
2022

## திருமதி சிங்கராசா ஜெயசீலி (கமலமணி)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் வவுனியா மதவு வைத்தகுளத்தை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிங்கராசா ஜெயசீலி (கமலமணி) அவர்கள் 08.10.2022 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிமியோன் சிங்கராசாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மலர்மணி காலஞ்சென்ற துரைமணி, தங்கராசா, அசோக்குமார் ஆகியோரின் சகோதரியும் ஜேசுராஜா (செட்டி), வசந்தி (பிரான்ஸ்), பிரேமா, ராசா (பிரான்ஸ்), ராஜு (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாபு, செல்வி, றொபேர்ட், ஜெரீனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் சுவீனா, தேவதாஸ், உதயன், மாலினி (பிரான்ஸ்), வாணி, யூட்குமார், ஜக்ஸன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் சுமிதா, பிரதீப், ரேக்கா (பிரான்ஸ்), வசீகரன் (ஜேர்மனி), மயூரன் (பிரான்ஸ்), செந்தூரன் (பிரான்ஸ்), சியானா (பிரான்ஸ்), சுரீனா, காலஞ்சென்ற சதீஷ், மோனிஷா (பிரான்ஸ்), குளோரியா (பிரான்ஸ்), நதியா (பிரான்ஸ்), சிந்து, சிந்துஜன், விதுஷா, நிதர்ஷா, ஜுலக்சன், ஜுபிகா, ஜுபேக்கா, ஜுலக்சினி, ஜதுர்ஷன், ஜஸ்மினா, ஜெனிபர் ஆகியோரின் பேத்தியும் தஸ்மி, தஸ்மிதன், மிஸ்மின், தெபோரா (பிரான்ஸ்) டிஸான், ஏனோக், ஈசாக், கர்ஸோன், கேஸத், அபி, அஜய், அமிஷா, அட்ரியல், ஆதென், சிபேலியா, சைலினா, அஷ்வின், ஆகாஷ், டிவிஷா, வசீஸ்,தனிதிஷ் ஆகியோரின் பூட்டியுமா வார். அன்னாரின் பூதவுடல் 10.10.2022 இன்று திங்கட்கிழமை அவரது இல்லத்தில் (வவுனியா மதவு வைத்தகுளம்) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 11.10.2022 நாளை செவ்வாய்க்கிழமை காலை 11 .00 மணிக்கு வவுனியா புனித அந்தோனியார் ஆலய.த்தில் திருப்பலி நடைபெற்று பின்னர், இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தரு கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**ஜேசுராஜா (செட்டி) 0772364209**

**தகவல்:**
**ராஜு வாணி (பிரான்ஸ்)**

# மரண அறிவித்தல்

## சின்னையா புஸ்பராசா

**(ஓய்வுபெற்ற அதிபர் வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம், யா/கோப்பாய் மகா வித்தியாலயம்)**



**தோற்றம் 17. 09. 1955**
**மறைவு 09. 10. 2022**

ஒட்டுசுட்டான் கற்சிலைமடுவைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில், மாங்குளம் போன்றவற்றை வசிப்பிடமா கவும் கொண்ட **சின்னையா புஸ்பராசா** அவர்கள் நேற்று (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந் துள்ளார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின் னையா இலட்சுமி தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான பண்டிதர் க.நாகலிங்கம் இரா சம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், உசாதேவி (ஓய்வுநிலை ஆசிரியை மகாஜனக் கல்லூரி, அருணோ தயக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்க ளின் அன்புக் கணவரும், துவாரகா (கிராம அலுவலர் தச்சடம்பன் ஒலுமடு) அவர்களின் பாசமிகு தந்தையும், சன்ஜீவன் (விரிவுரையாளர் இலங்கை ஜேர்மன் பயிற்சி கல்லூரி அறிவியல் நகர்) அவர்களின் மாமனாரும், வாகீசின் அன்புப் பேரனும், சரஸ்வதி (கனடா), சாந்த குமாரி (ஜேர்மனி), கமலகுமாரி (வவுனியா), காலஞ்சென் றவர்களான அழகராசா, வரதராசா மற்றும் தியாகராசா (பொறியியலாளர் கனடா) ஆகியோரின் அன்புச் சகோத ரனும், சதாபக்தி (நில அளவையாளர் கனடா), சிவராசா (ஜேர்மனி), சிவராசா (வவுனியா), கௌரி (கனடா), தவராணி (கொழும்பு), வேதநாயகன் (ஓய்வு நிலை மாவட்ட அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம்), கேதீஸ்வரன் (அதிபர் யா/அருணோதயக் கல்லூரி), மனோகரி (ஆசிரியர் யா/யூனியன் கல்லூரி), திவாகரி (பொட்சுவானா), தயாநிதி, கலாமதி (பேராசிரியர் யாழ் பல்கலைக்கழகம் மருத்துவபீடம்), ஆகியோரின் அன்பு மைத்துன ரும், சுப்பிரமணியம் மவுலேஸ்வரி (பளை) தம்பதியரின் சம்பந்தியும், சத்திய வதி(கனடா), சந்திரவதி (கனடா), அகல்யா (ஜேர்மனி), சிவாகரன் (அவுஸ்ரேலியா), சிவாஜினி (வவுனியா), சுதர்சன் (அவுஸ்ரேலியா), சுதாகரன் (வவுனியா), கமலாயினி (கனடா) ஆகியோரின் மாமனா ரும், பிறேமிலன் (கனடா), குறிஞ்சி (கனடா), குமணன் (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையும், நிலா, தரன், துளசி, ஓவியா, சிவன், தீபிகா, சர்விகன், அஜய், ஆதிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (11.10.2022) செவ்வாய்கிழமை முற்பகல் 10 மணிய ளவில் பொற்பதி வீதி, கோண்டாவிலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**தொடர்புகளுக்கு:-**
**சன்ஜீவன் (மருமகன்) - 0773493095**
**உசாதேவி (மனைவி) - 0777060686**
**சந்திரா (மருமகள் கனடா) - 14166840826**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

# திலீபனை நினைவுகூர்ந்தமையால் முடக்கப்பட்டது முகநூல் கணக்கு!

## கருத்துச் சுதந்திரத்துக்கு இடமில்லையென சிறீதரன் எம்.பி. ஆதங்கம்

தியாக தீபம் திலீபனை அஞ்சலித்து ஒளிப் படங்களைப் பதிவேற்றியமைக்காக எனது முகநூல் கணக்கு முடக்கப்பட்டுள்ளது. மனவுணர்வுகளை வெளிப்படுத்தும் பொது வெளி ஊடகமான முகநூல் அரசசார்பான ஊடகமொன்றாக பார்க்கும்நிலை தோன் றியுள்ளது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரி வித்துள்ளார். நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாக நடைபெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவின் விசேட உரை தொடர்பான விவாதத்திலேயே மேற்படி விடயத்தை சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எனது சொந்தப் பெயரில் இயங்கிவரும் எனது தனிப்பட்ட முகநூல் கணக்கில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் தொடர்பான ஒளிப்படங்களையும் செய்தி களையும் பதிவேற்றம் செய்தமைக்காக 90 நாள்களுக்கு இயங்க முடியாதவாறு முடக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. மனித உரி மைகள் பேரவையின் தீர்மானத்தின் நிலைமாறு கால நீதி பொறிமுறையின் அடிப்படையில் வணக்க முறைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவும் அஞ்சலிக்க அனுமதி வழங்கி யுள்ளபோதும் என் போன்ற பலரினதும் முகநூல் கணக்குகள் திலீபனுக்கு அஞ் சலித்தமைக்காக முடக்கப்பட்டுள்ளமை எமது 'கருத்துச் சுதந்திரத்தைக் கேள்விக் குட்படுத்தியுள்ளது.

மன உணர்வுகளை வெளிப்படுத்தும் பொதுவெளி ஊடகமாக முகநூல் பார்க்கப் பட்ட நிலையில் தற்போது அரச சார்பான ஊடகமொன்றாகவே பார்க்கும் நிலை உருவாகியுள்ளது.

இதுதொடர்பில் முகநூல் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடத்தலைவர் அபயரத்னவுக்கு மின்னஞ்சல் மூலம் கோரிக்கை முன்வைக்கப்பட்டும் இன்று வரையில் அது தொடர்பில் எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை - என்றார்.

இதற்கு இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் பதிலளிக்கையில், "முகநூலுக்கும் இலங்கை அரசுக்கும் தொடர்பு இல்லை. அது வெளிநாட்டு நிறுவனம், எனவே, இது சர்வதேசத்தின் தடையே தவிர எமது தடை அல்ல" - என்றார். (ச-22)

# மரண அறிவித்தல்

தோற்றம்
21
.
01
.
1931



மறைவு
09
.
10
.
2022

## தாமு வீரசிங்கம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

கொக்கட்டியாவளவு அல்வாயைப் பிறப்பிடமாகவும் 'கௌரி கோட்டம்' அல்வாயை வதிவிடமாகவும் கொண்ட தாமு வீரசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்கள் நேற்றைய தினம் (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தாமு.பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மாணிக்கம்-நாகமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தெய்வநாயகியின் அன்புக் கணவரும் அமரர்களான செல்வநாதன் (இலங்கை வங்கி), விஸ்வநாதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) மற்றும் கௌரி (லண்டன்), துளசி (ஆசிரியை- யா/திக்கம் சித்திவிநாயகர் வித்தி), கஸ்தூரி (ஆசிரியை- ஹமீட் அல்ஹுசைனி கல்லூரி, கொழும்பு), ரங்கநாதன் (ஆசிரியர்- யா/ செங்குந்தா இந்துக்கல்லூரி), திவ்யநாதன் (புள்ளிவிபர உத்தியோத்தர்- மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம், பிரதேச செயலகம்- கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மேரிஇசபெல், கனகாம்பிகை, கருணைவேல் (லண்டன்), வாசுதேவன், சுரேஸ்பாலன் (கணக்காளர்- கட்டார்), சுஜீவா (ஆசிரியை- யா/வண்ணை நாலவர் மகா வித்தி), தேனுகா (ஆசிரியை- யா/நெல்லியடி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரோஷன் (பிரதேச சபை - நல்லூர்), மேரி கஸ்தூரி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), தினேஷன் (வீடமைப்பு அதிகாரசபை- மாங்குளம்)- நினுஷா (ஆசிரியை, வ/ஓமந்தை மத்திய கல்லூரி), சுபேஷன்- மதுர்பனா, தேனுஷன் (பிரான்ஸ்), வினுஷன், மேரி ஜானுஷா, விஜேந்திரா (பாதுகாப்பு உத்தியோகத்தர், இரணைமடு)- டிறோஜினி, சத்தியேந்திரா (இலங்கை வங்கி)- அருள்வதனி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), தனுஷா- பிரகாஸ் , விஸ்வேதிகா (ஆசிரியை- யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)- நிகாசன் (நீதிமன்றம், யாழ்ப்பாணம்), சஞ்சிதன் (கணக்காளர், Renuka Holding PLC)-பிரார்த்தனா (சட்டத்தரணி), சாயித்தியா (லண்டன்)- விநோத் (பொறியியலாளர், லண்டன்), தாரகா (லண்டன்)- டேவிட் (Mechanical Engineer), ஸ்ருதி, ஆர்நிகன், ஆர்த்தி, விஷாலி, ஷாருதி ஆகியோரின் அன்புப் பேரனும் நிஸ்மிகா, ஆன்சிகா, மெரிஸ்கா, நிகின், ஷக்சன், தர்மிதன், விஸ்மிதன், திகாசன், ஸமித்திரா, மகிஷாயினி, சேயோன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், தங்கம்மா, சிந்தாமணி, அம்பிகாவதி, பேரின்பநாதன் (பொறியியலாளர், இலங்கை வங்கி) மற்றும் தவநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான அப்பையா, இராசேந்திரம், கதிரவேல், கணேசன் மற்றும் லோகேஸ்வரி, செல்லத்தம்பி, அமரர் சின்னராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.10.2022) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**'கௌரிகோட்டம்'**
**அல்வாய்**

**தகவல்- குடும்பத்தினர்**
**வீ.ரங்கநாதன் 0773062082**
**வீ.திவ்யநாதன் 0777351803**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியான திசையில் பொருளாதார வளர்ச்சி

புதுடில்லி, ஒக். 10

நுகர்வோர் செலவினங்களில் எழுச்சி மற்றும் வேலைவாய்ப்பு அதிகரிப்பு ஆகியவை அடுத்த மாதங்களில் இந்தியாவில் பொருளாதார வளர்ச்சியைத் தக்கவைக்கும் என்று இந்திய அரசாங்கம் ஒகஸ்ட் மாதத்துக்கான பொருளாதார மதிப்பாய்வில் தெரிவித்துள்ளது.

தனியார் நுகர்வு அதிகரிப்பு மற்றும் அதிக திறன் பயன்பாட்டு விகிதங்கள் கடந்த தசாப்தத்தில் தனியார் துறை மூலதனச் செலவுகள் அதன் மிக உயர்ந்த மட்டங்களில் ஒன்றை அடைய உதவியது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் - ஒகஸ்ட் மாதங்களில் அரசாங்க செலவினங்கள் 35சதவீதம் அதிகரித்ததன் மூலம் வணிக முதலீடு ஊக்குவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்கான வரி வருவாய் வளர்ச்சி சரியான திசையில் இருப்பதாக அறிக்கை கூறியுள்ளது.

அதிக அளவிலான அந்நியச்செலாவணி இருப்பு, நீடித்த அந்நியநேரடி முதலீடு மற்றும் வலுவான ஏற்றுமதி வருவாய் ஆகியவை மேம்பட்ட பொருளாதாரங்களில் பணவியல் கொள்கையை இயல்பாக்குவதற்கும் மற்றும் புவிசார் அரசியல் மோதலால் எழும்நடப்புக் கணக்குப் பற்றாக்குறையை விரிவுபடுத்துவதற்கும் ஒரு நியாயமான இடைவெளியை வழங்கியுள்ளன.

நடப்பு நிதியாண்டில் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில், நாட்டின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீதத்துக்குள் இருக்கும் என இந்திய ரிசர்வ் வங்கி கணித்துள்ளது.

பொருளாதார வளர்ச்சியை திடீரென நிறுத்தாமல் அதன் பணப்புழக்க அளவுகளை அளவீடு செய்வதில் இந்தியா சிறந்த நிலையில் உள்ளது; நாட்டில் பணவீக்க அழுத்தங்கள் குறைந்து வருவதாகவும் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

(ஒ-5)

## தெங்குச் செய்கையில் 'வெள்ளை ஈ' பாதிப்பு

*1928 க்கு அழைக்கலாம்*

கொழும்பு, ஒக். 10

தென்னை பயிர்ச் செய்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் 'வெள்ளை ஈ' எனப்படும் ஒரு வகையான வண்டை ஒழிப்பதற்கான வேலைத்திட்டத்தை பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு ஆரம்பித்துள்ளது.

அது தொடர்பிலான அறிவிப்புக்களை தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் 1928 என்ற துரித இலக்கத்துக்கு வழங்க முடியும் என அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அத்துடன் 070 400 1928 என்ற வட்ஸப் இலக்கம் ஊடாக தெங்கு செய்கை சார்ந்த நோய் மற்றும் பாதிப்பு தொடர்பிலான புகைப்படங்களை அனுப்ப முடியும் என அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

## சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 10

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திருவடிநிலை கடற்பரப்பில் கடந்த 4ஆம் திகதி மீட்கப்பட்ட சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை வடக்கு பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தேவபாலன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளாரென அவரது மனைவி உறுதிப்படுத்தியுள்ளார். கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் காணாமற் போயுள்ளார். அவர் காணாமற்போனமை தொடர்பில் முறைப்பாடு எதுவும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. (அ-ஒ-125)

## விருப்பு...

நாட்டில் பெரும்பான்மையான மக்கள் தற்போதுள்ள அரசியல் முறைமையை நிராகரிப்பதால், அவர்கள் விரும்பிய அரசியல் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். அதன்படி, அடுத்த தேர்தலுக்கு முன், உள்ளூராட்சி மன்றங்களுக்கான (பிரதேசசபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகள்) உறுப்பினர்களின் எண்ணிக்கை 8ஆயிரத்திலிருந்து 4ஆயிரம் வரை குறைக்கப்படும் என்றும், 'மக்கள் சபை' வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

அத்துடன், பிரதேசசபையின் நிறைவேற்று அதிகாரம் தவிசாளர் என்ற ஒற்றைத் தலைவருக்குச் செல்வதற்குப் பதிலாக தவிசாளர் தலைமையிலான குழுவுக்கு வழங்கப்படவேண்டும் என்றும், அடுத்த பிரதேசசபைத் தேர்தலுக்கு முன்னர் இந்தத் திருத்தங்களைச் செய்வதற்கு சட்டவரைவு தயாரிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசியலில் ஊழல் தலைதூக்க முக்கியமான காரணம் விருப்பு வாக்கு முறையே என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உடனடியாக விருப்பு வாக்கு முறையற்ற பட்டியல் முறை அல்லது கலப்பு முறை ஒன்றை (ஒற்றை மற்றும் விகிதாசார முறை) கொண்ட தேர்தல் முறைமைக்குச் செல்ல வேண்டும் எனவும் தேர்தலில் செலவிடப்படும் நிதிக்கும் தேர்தல் சட்டம் மூலம் வரையறைகள் இடப்படவேண்டுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் தொழில் நிபுணர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில்,

நாடாளுமன்றத்திலுள்ள 225 உறுப்பினர்களையும் தியவன்ன ஆற்றில் தள்ளவேண்டுமென்று கூறுகின்றனர். அவ்வாறு தனி நபர்கள் கூறவில்லை. அரசியல் முறைமையை அவர்கள் ஏற்காததால் தான் அவ்வாறு கூறுகின்றனர். இந்த அரசியல் முறைமை மாற்றப்பட வேண்டுமென்று மக்கள் தற்போதும் கூறுகின்றனர். வன்முறையை யாரும் விரும்புவதில்லை.

### மக்கள் சபை

கிராம மட்ட அரசியலில் மக்கள் சலிப்படைந்து விட்டதால் இன்று புதிய கருத்தை ஏற்றுக் கொள்கிறோம். அது அரசு அல்ல, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, மக்கள் சபை முறையை முன்வைத்துள்ளார். ஒவ்வொரு தொகுதியிலும், அந்த கிராமத்திலுள்ள பொது அமைப்புகளை ஒருங்கிணைத்து, ஒரு குழுவாக பணிகளைச் செய்யவேண்டும். அதுதான் மக்கள் சபை ஆகும். மக்கள் சபைகள் இயங்கும்போது பிரதேசசபைகளுடன் ஒருங்கிணைப்பு இருக்கவேண்டும். மக்கள் சபைகளை அகற்ற பிரதேச சபைகளுக்கு அனுமதி இல்லை.

நாம் எப்படி இணைந்து செயற்படவேண்டும் என்பதைத் திட்டமிட வேண்டும். பிரதேசசபை முறைமை தொடர்பில் பல கேள்விகள் உள்ளன. பல பிரதேசசபைகள் இலாபம் கூடப் பெறுவதில்லை. வரிப் பணத்தை நம்பி இருக்கிறார்கள். பணம் பெறும் நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகள் சம்பளம் வழங்குவதற்கு அந்தப்பணத்தை பயன்படுத்துகின்றன. எனவே இந்த முறையைப் பற்றி நாம் சிந்திக்கவேண்டும்.

### விருப்பு வாக்கு முறைமை

விருப்பு வாக்கு முறையை பலர் விரும்புவதில்லை. விருப்பு வாக்கு முறைமை பற்றி யாரும் முதலில் சிந்திக்கவில்லை. ஜே.ஆர்.ஜெயவர்த்தன மிக ஆழமாகச் சிந்தித்து 1975 இல் பட்டியல் முறையை முன்மொழிந்தார். அது ஏனைய கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி நாம் நகர சபைத் தேர்தலை நடத்தினோம். மாநகர சபைத் தேர்தல் நடந்தது. மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் நடைபெற்றது. அந்த முறைமையை வெற்றிகரமாக நாம் முன்னெடுத்துச் சென்றோம். ஆனால், 1988 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் இருந்த கட்சிகள் திடீரென பட்டியல் முறைக்குப் பதிலாக விருப்பு வாக்கு முறையைக் கொண்டுவர முடிவு செய்தன. ஒரு விருப்பு வாக்கு அல்ல, 3 விருப்பு வாக்குளை வழங்க யோசனை முன்வைக்கப்பட்டது. அதேபோல், 196 ஆக இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை 225 ஆக அதிகரித்தனர்.

இந்நாட்டு அரசியலில் ஊழல் மோசடிகளுக்கு முக்கியமான காரணம் விருப்பு வாக்கு முறையே ஆகும். எனவே நாம் புதிய தேர்தல் முறையொன்றைத் தயார் செய்ய வேண்டும். விருப்பு வாக்கு முறை இல்லாத பட்டியல் முறை அல்லது கலப்பு முறை (ஒற்றை மற்றும் விகித முறை) இவ்விரண்டில் ஒன்றைப் பற்றி கலந்துரையாடிய பின்னர் ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும்.

இன்று தேர்தலுக்காக அதிக பணம் செலவிடப்படுகிறது. இன்று சிலர் 'தேர்தல் பரப்புரைகளுக்காக 2030, 50 மில்லியன் ரூபா வரை செலவிடுகின்றனர். இதனை எவ்வாறு திரும்பப் பெறுவது? இந்தத்தேர்தல் முறையால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடைபட்டுள்ளனர். அப்படியானால், தேர்தல் சட்டத்தின் மூலம் தேர்தலுக்குச் செலவழிக்கக்கூடிய பணத்துக்கு வரையறைகள் வேண்டும்.

### இளைஞர்கள் இல்லை

மற்றுமொரு விடயமும் இருக்கிறது. இன்று நமது அரசியல் கட்சிகளில் இளைஞர்கள் இல்லை. பலர் பழையவர்களுடன் பெயரளவில் வேலை செய்கிறார்கள். அப்படியானால், அரசியல் கட்சிகளின் யாப்பு, அவற்றின் செயற்பாடு, உறுப்பினர்களை சேர்ப்பது எப்படி, மத்திய குழுக்களைத் தேர்ந்தெடுப்பது, எப்படி வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பது என்ற விடயங்கள் குறித்தும் தனியான சட்டம் முன்வைக்கப்படவேண்டும்.

தற்போது ஜேர்மனி போன்ற நாடுகளில் அரசியல் கட்சி சட்டம் என்று சட்டங்கள் உள்ளன. அதன்படி செயற்பட வேண்டும். வெளிப்படைத்தன்மை இருப்பதால், தேர்தல் செலவுகளுக்கு கட்டுப்பாடுகள் இருப்பதால் அந்த நாட்டு நாடாளுமன்றம், அரசியல் கட்சிகளுக்கு பணம் கொடுக்கின்றது. தனியார் நிறுவனங்களில் இருந்து பெறாமல் நாடாளுமன்றம் மூலம் பணத்தைக் கொடுப்பது நல்லது. அதனால் பணத்தை அரசியல் கட்சிகள் செலவிடுவது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். அமெரிக்காவிலும் இந்த முறை உள்ளது. இந்தச் சட்டங்களை நாமும் கொண்டுவரவேண்டும்.

ஒரு புதிய பொருளாதாரத்துடன், ஒரு புதிய அணுகுமுறை இருக்க வேண்டும். மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகச் செயற்பட முடியாது என சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். அவர்கள் ஒழுக்கத்தை மீறியிருந்தால் உறுப்பினர்களுக்கு எதிராகச் செயற்பட முடியும். இதை எப்படியாவது வலுப்படுத்துவதற்காக பிரிட்டன் நாடாளுமன்றத்தில் செய்வதுபோல், உறுப்பினர்களின் நடத்தை மற்றும் நெறிமுறைகள் குறித்த விதிகளை நாடாளுமன்றத்தில் முன்வைப்பேன். அதற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்கவேண்டும்.

இந்த விதிகள், கட்டுப்பாடுகள் அனைத்தையும் கொண்டு வந்து இந்த திருத்தங்களைச் மேற்கொண்டால் மக்களின் நம்பிக்கையைப் பெறலாம். அப்போது அடுத்த தேர்தலில் பலர் வாக்களிப்பார்கள். 85 வீதமானோர் வாக்களிக்க வேண்டும்.

மனப்பாங்கு ரீதியான மாற்றம் ஏற்பட வேண்டும். இனியும் ஊர்வலம் செல்வதால் எந்தப் பயனும் இல்லை. இப்போது என்ன நடந்திருக்கிறது என்றால் அரசியல் கட்சிகள் தமக்கு ஆதரவைப் பெறுவதற்காக போராட்டத்தின் பக்கம் சாய்ந்துள்ளன. போராட்டம் அரசியல் கட்சிகளில் சார்ந்து இருக்கவில்லை. மக்களின் அபிப்பிராயங்களுக்கு ஏற்ப விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கொண்டு வந்து நாடாளுமன்றத்துக்கு மக்கள் விரும்புபவர்களை நியமிக்க சந்தர்ப்பம் வழங்கவேண்டும். இந்த வேலையைத் தான் எதிர்காலத்தில் நாம் செய்யவேண்டும் - என்றார்.

(அ-ஒ-22-44)

## மாவை...

மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அ.பரஞ்சோதி தெரிவித்துள்ளார்.

தனது பதவி விலகல் கடிதத்தை கட்சித் தலைவர் மற்றும் செயலருக்கு அனுப்பி வைத்த பின்னர் ஊடகங்களுக்கு வெளியிட்ட தகவலிலேயே மேற்படி விடயத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

'உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் பங்காளிக் கட்சிகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் வலி.கிழக்கு பிரதேசசபைத் தவிசாளரை மாற்றுமாறு விடுத்த கோரிக்கையை செயற்படுத்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் என்ற ரீதியில் மாவை.சோ.சேனாதிராசா தவறிவிட்டார். இதன் அடிப்படையிலும் கட்சியை வினைத்திறனாகக் கொண்டு செல்ல முடியாத ஒரு இயலாமையான நிலையில் தலைவர் காணப்படுகின்றார் என்பதன் அடிப்படையிலும் கட்சியிலிருந்து நான் விலகுகின்றேன்' - என்றார் பரஞ்சோதி.

(அ-ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிமேல்...

தெரியவருகின்றது.

உலக வங்கியின் கிளையான சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் உதவிகளைப் பெறும் நோக்கிலும், அந்நியச் செலாவணி இருப்பில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, பணவீக்கம், கடனை மீள செலுத்துவதில் உள்ள நெருக்கடி உள்ளிட்ட காரணிகளாலுமே இதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அமைச்சரவைப் பத்திரத்தில் முழுமையான விளக்கம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர் அது தொடர்பில் உலக வங்கிக்கு தெரியப்படுத்தப்படும்.

இலங்கையானது இதுவரையில் மத்திய வருமானம் பெறும் நாடாகவே அடையாளப்படுத்தப்பட்டு வந்தது. (அ-ஓ-44)

## பலாலி...

கொழும்பு ஆங்கில வார இதழான சண்டே ரைம்ஸ் வெளியிட்டுள்ளது.

பலாலிக்கும் சென்னைக்கும் இடையிலான விமானக் கட்டணம் கொழும்பு மற்றும் சென்னைக்கு இடையிலான விமானக் கட்டணங்களை விட கணிசமாகக் குறைவாக இருக்கும் என விமான சேவை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விமான சேவைகளை மீள ஆரம்பிப்பது மற்றும் குறைவான விமானக் கட்டணங்கள் வடக்கு மக்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்று வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

இதேவேளை- விமான சேவைகளை மீள ஆரம்பிப்பதற்குத்தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைத் தளபதி சந்தன விஜயசுந்தர தெரிவித்துள்ளார். (அ-ஓ-இ)


## A/L வரலாறு

மாவட்ட தேசிய சாதனைகளுக்கும் அதிக 'A' சித்திகளுக்கும் வழிகாட்டும் உங்கள் ஆசிரியர்

M.பத்மன் M.A (History), M.Ed (R)

2021 - Day Class நடைபெறுகிறது

2023, 2024 A/L வகுப்புக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன

**கற்பிக்கும் இடங்கள்**

- D.M.I யாழ்ப்பாணம்
- உயர்கலைக்கல்லூரி குளப்பிட்டி
- BITSMANS மானிப்பாய்

வெளிமாவட்ட மாணவர்களுக்கு Online Class நடைபெறுகின்றன.

தொடர்பு: 077 482 5587

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபெட் வீதியில் இரண்டாவது காணி.
- புத்தூர் சந்தியிலிருந்து 1 KM தூரம்.
- புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 KM தூரம்.
- நன்னீர் ஊற்று
- நல்ல சூழல்.

077 62 34 204 / 076 43 65 814

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 1/2 KM தூரம்
- பார்வையிடும் நேரம்: காலை 06.00 - மாலை 6.00

077 911 6983 /076 755 8606

அமெரிக்க லொத்தர் இலவச விசா

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

Passport அவசியமில்லை

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்

**V2 Travels**

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்

0768226244

## A/L CHEMISTRY TAMIL / ENGLISH

ஆசிரியரால் (B.Sc, M.Sc (Chemistry) தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும்.

076 410 5838

## டிப்பர் வாகனம் உடன் தேவை

06 சில்லு, 10 சில்லு டிப்பர் வாகனம் உடன் தேவை.

(CR 38240) (3/6)

077 071 6329

## வேலையாள்கள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள புடைவைக் கடைக்கு அனுபவமுள்ள பெண் வேலையாள்கள் தேவை. நல்லூர் எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத் தக்கது.

077 007 7465, 077 741 9511

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 2 பரப்பு நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு.

A-9 வீதியில் இருந்து 100M தூரம் (இரண்டாவது காணி) மூன்று பக்கப் பாதை

- நன்னீர் ஊற்று நிலம்
- செம்மண் காணி
- 20 அடிப் பாதையுடன்
- தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்: காலை 8 - மாலை 06 மணிவரை

077 6585 999

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்திக்கு அருகாமையில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- ✓ 4 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ தரகர் தேவையில்லை.
- ✓ A-09 வீதி முகப்புடன் காணி உள்ளது.

தொடர்பு: 077 8748 135

077 4082 649


## மரண அறிவித்தல்

தோற்றம் 19 - 09 - 2008



மறைவு 09 - 10 - 2022

## ஜீவானந்தம் லோஜிதன்

**(மாணவன் - தரம் - 09 யா/ இணுவில் மத்திய கல்லூரி)**

இணுவில் மேற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜீவானந்தம் லோஜிதன் நேற்று (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஜீவானந்தம் (பலநோக்கு கூ.ச. தெல்லிப்பழை) - சாரதா (ஆசிரியை, மகாஜனா கல்லூரி தெல்லிப்பழை) தம்பதியரின் பாசமிகு மகனும், செல்லத்துரை - தங்கமலர், துரைராசா - மகேஸ்வரி ஆகியோரின் பேரனும், சுபங்கரி (தரம் - 07 மாணவி, யா/மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பழை) அன்புச் சகோதரனும், அரியானந்தம், தயானந்தன், ஜெயானந்தன், சறோஜினிதேவி - அமிர்தலிங்கம், சாந்தகுமாரி - சண்முகநாதன், சிவசக்தி ஆகியோரின் பெறாமகனும், அஜந்தா - சுதர்சன், சிவகுமார் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2022) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : -
[illegible]தரன் - 076 676 8403
[illegible]தரன் - 074 340 0939
சித்தப்பா - 077 617 6456

தகவல் : குடும்பத்தினர்.


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி **A9** பிரதான வீதியுடன் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம்

காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

**தரகர் தேவையில்லை.**

தொடர்பு:- **ஜெயம்**

077 8147 389

077 2417 589




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 10.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org